## தமிழ்மொழிக்கு அளப்பரிய பல சாதனைகள் புரிந்த

# வா.மு.சேதுராமன் முதலாமாண்டு நினைவேந்தல் - பெருங்கவிக்கோ பேராலயத் திறப்பு விழா!

## முன்னாள் அமைச்சர் ராஜகண்ணப்பன் சிறப்புரை! கே.கே.கதிரவன் எம்.எல்.ஏ. முன்னிலை!


ராமநாதபுரம், ஜூலை 2-

தமிழ் மொழிக்கு அளப்பரிய பல சாதனைகள் புரிந்தவரும் தமிழால் உலகளந்த பெருமகனாருமான பெருங்கவிக்கோ வா.மு.சேதுராமன் பேராலயத் திறப்பு விழா மற்றும் வா.மு.சேதுராமன் முதலாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி 4.7.2026 சனிக்கிழமை காலை 8.00 மணியளவில், ராமநாதபுரம் மாவட்டம், அபிராமம் உடைகுளம் சாலை, ஆண்டநாயகபுரத்தில் நடைபெறுகிறது.

காலை 8 மணி அளவில் புலவர் நாவை. சிவம் குழுவினரின் திருக்குறள் முற்றோதல் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

நிகழ்ச்சிக்கு பரமக்குடி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கே.கே.கதிரவன் முன்னிலை வகிக்கிறார்.

முதுகுளத்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான ராஜ



கண்ணப்பன் கலந்து கொண்டு "நான் கண்ட பெருங்கவிக்கோ" நூலினை வெளியிட்டு, கட்டுரை ஆசிரியர்களை கௌரவித்தும் பெருங்கவிக்கோ பேராலயத்தை திறந்து வைத்தும் உரையாற்றுகிறார்.

இதில் இளம் முனைவர் வா.மு.சே.பூங்கொடி, முனைவர் மதியழகன், வா.மு.சே. தமிழ் மணிகண்டன், மகாலட்சுமி, வா.மு.சே.ஆண்டவர், முனைவர் விமலா தேவி, தமிழ்மாமணி வா.மு.சே திருவள்ளுவர், பரிமளா ஆகியோர் உரை நிகழ்த்துகின்றனர்.

கவிஞர் வா.மு.சே.கவி அரசன் முத்துமாரி சிறப்பு விருந்தினர்களுக்கு சிறப்பு செய்கிறார்.

இந்நிகழ்ச்சியில் ஆசிரிய மணி மாணிக்கம், மலேசிய பேராசிரியர் இ.கி.இராமசாமி, பெரியார் நெறியாளர் வரதராசன், மீனாட்சி சுந்தரம் இலக்குமி, நா.குழந்தை, செந்தில், கேலக்சி எம்.பாலா, பேராசிரியர் கபிலன், போத்தி, ஆசிரியர் மூக்கன் ஆகியோர் வீர வணக்க உரை நிகழ்த்துகின்றனர்.

கவிச்சிங்கம் முனைவர் கண்மதியன் தலைமையில் ஆனந்தராசு முன்னிலையில் பழ தமிழாளன், கவிஞர் கடவூர் மணிமாறன், கவிஞர் கிருட்டிணமூர்த்தி, கவிஞர் மதியரசு, கவிஞர் குறளடியான், மதுரகவி மறத்தமிழன், இசைப் பாவலர் நா.நந்தன், கவிஞர் தில்லை பாஸ்கர், கவி பாரதி அசோக் ராஜ், இலக்கிய மாமணி மரிய விசுவாசம், ஆசிரியர் மாரிமுத்து, கவிஞர் இளைய கோபால் ஆகியோர் கவி பாடுகின்றனர்.

புலவர் நெடுஞ்சேரலாதன் தலைமையில் மார்சல் முருகன், வழக்கறிஞர் சிவகுமார், புலவர் மா.கோபால கிரிட்டிணன், தொமுச வ.இளங்கோ, கவிஞர் முயற்சி முருகேசன், கவிஞர் மோ.அன்பழகன், டாக்டர். கீதா குமரி, தன்சிங் பாதுஷா, கவிஞர் திருவை பாபு, செகன்னாதன், ராமகிருட்டிணன் ஆகியோர் பங்கு பெறும் கருத்தரங்கம் நடைபெறுகிறது.

அறிவன், அன்பன், புவி அரசன், யாழினி, தமிழ் நடை பாவை, கவின், சேதுச்செல்வி, அருளன், இனியா சேது, தமிழ் அறிமார்க், நிலா கோகுல், தமிழ்க்கீரன் பெருங்கவிக்கோ ஆகியோர் அனைவரையும் வரவேற்கின்றனர்.

நிறைவாக பால்.கோபிநாதன், செந்தூர் பாண்டி ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

---

## உலகின் பெருங்காவியங்களை தமிழில் தந்தவர்!

# தமிழ் வாழ்வாக வாழ்ந்து மறைந்துள்ளார் கவிஞர் புவியரசு!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜூலை 2 -

கவிஞர் புவியரசு மறைவுக்கு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

**வானம்பாடி கவிதை இயக்கத்தைத் தோற்றுவித்தவர்களில் முக்கியமானவரும் முதுபெரும் கவிஞருமான திரு.புவியரசு அவர்கள் மறைந்த செய்தியறிந்து வேதனையடைந்தேன்.**

**தமிழ்மீது கொண்ட பற்றின் காரணமாக ஜெகநாதன் என்ற தம் இயற்பெயரைப் புவியரசு என்று மாற்றிக் கொண்டவர். ஷேக்ஸ்பியர், கலில் கிப்ரான், உமர் கய்யாம், ஓஷோ, பியோதர் தஸ்தயேவ்ஸ்கி, ரவீந்திரநாத் தாகூர், காசி நஸ்ருல் இஸ்லாம் என உலகின் பெரும் கவிகள், எழுத்தாளர்களின் இறவாக் காவியங்களைத் தமிழில் ஆக்கியளித்துப் பங்காற்றியவர்.**

**இருமுறை சாகித்திய அகாதெமியின் விருதினையும், 2008ஆம் ஆண்டுக்கான கலைஞர் பொற்கிழி விருதினையும் வென்றவர்.**

**தம் வாழ்வே தமிழ் வாழ்வாக வாழ்ந்து மறைந்துள்ளார் கவிஞர் புவியரசு அவர்கள். அன்னாரை இழந்து வாடும் தமிழ் கூறும் நல்லுலகத்தினர் அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.**

இவ்வாறு தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

---

## த.வெ.க. அரசைக் கண்டித்து

# மாற்றுத்திறனாளிகள் சாலை மறியல்!

## வலுக்கட்டாயமாக கைது!

சென்னை, ஜூலை 2-

VBGRamG, கருவிழி கைரேகை கட்டாயம் என்ற சட்டங்களை திரும்பப் பெற வேண்டும் என மாற்றுத்திறனாளிகள் தமிழ்நாடு முழுவதும் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

சென்னை சைதாப்பேட்டையில் நடைபெற்ற மாற்றுத்திறனாளிகள் போராட்டத்தில் தென் சென்னை மாவட்ட தமிழ்நாடு அனைத்து வகை மாற்றுத்திறனாளிகள் மற்றும் பாதுகாப்பு உரிமைகளுக்கான சங்கத்தினர் பங்கேற்றனர். அப்போது VBGRAMG சட்ட நகலை எரித்து ஒன்றிய மற்றும் மாநில அரசுகளுக்கு எதிராக கருப்புக் கொடியுடன் அவர்கள் மறியல் போராட்டம் நடத்தினர். அவர்களை காவல்துறையினர் வலுக்கட்டாயமாக கைது செய்தனர்.

**அறந்தாங்கி, புதுக்கோட்டை**

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி மணமேல்குடியில் அனைத்து வகை மாற்றுத்திறனாளிகள் சங்கம் சார்பில் சாலை மறியல் போராட்டம் நடைபெற்றது.மணமேல்குடி கிழக்கு கடற்கரை சாலையில் மாவட்ட தலைவர் தங்கவேல் தலைமையில் நடைபெற்ற போராட்டத்தில் ஏராளமானோர் பங்கேற்று ஒன்றிய, மாநில அரசுகளை கண்டித்து முழக்கங்கள் எழுப்பினர்.

**விழுப்புரம்**

இதேபோல், விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரே மாற்றுத்திறனாளிகள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். அப்போது மாற்றுத்திறனாளிகள், முதியவர்களை பாதிக்கும் வகையில் கொண்டு வரப்பட்டுள்ள VBGRamG மற்றும் கருவிழி கைரேகை கட்டாய திட்டங்களை கைவிட வேண்டும் என வலியுறுத்தி, ஒன்றிய மற்றும் மாநில அரசுக்ளுக்கு எதிராக முழக்கமிட்டனர். தொடர்ந்து சாலை மறியலில் ஈடுபட்ட நிலையில், அவர்களை காவல்துறையினர் வலுக்கட்டாயமாக கைது செய்தனர்.

---

## ஜிம். க.பிரபு தலைமை! எம்.கிருஷ்ணமூர்த்தி – இரா.துரைராஜ் முன்னிலையில்

# சைதை மேற்குப் பகுதி, விளையாட்டு மேம்பாட்டு அணி: கு.அஜித்குமார் திருமணம்!

## மா.சுப்பிரமணியன் நடத்தி வைக்கிறார்! மு.மகேஷ்குமார் – ப.தாயகம்கவி – ச.அரவிந்த் ரமேஷ் – காரம்பாக்கம் க.கணபதி – ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா – தூத்துக்குடி எஸ்.ஜோயல் பங்கேற்பு!

சென்னை, ஜூலை 2-

சைதை மேற்குப் பகுதி, விளையாட்டு மேம்பாட்டு அணி பகுதி துணை அமைப்பாளர் கு.அஜித்குமார் திருமணத்தை மாவட்ட கழக செயலாளர், முன்னாள் அமைச்சர் மா.சுப்பிரமணி யன் நடத்தி வைத்து வாழ்த்துகிறார்.

ஜிம்.க.பிரபு தலைமை! எம்.கிருஷ்ண மூர்த்தி எம்.சி., இரா.துரைராஜ் எம்.சி., முன்னிலை வகிக்கின்றனர். மு.மகேஷ் குமார், ப.தாயகம் கவி, ச.அரவிந்தரமேஷ், காரம்பாக்கம் க.கணபதி, ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா, தூத்துக்குடி எஸ்.ஜோயல் பங்கேற்கின்றனர்.

சென்னை தெற்கு மாவட்டம், சைதை மேற்கு பகுதி விளையாட்டு மேம்பாட்டு அணி பகுதி துணை அமைப்பாளர் மணமகன் கு.அஜித்குமார், மணமகள் சிந்து (எ) பவித்ரா அவர்களின் திருமண வரவேற்பு விழா, மற்றும் திருமண விழா நடைபெற உள்ளது.

கழக தலைவர் முன்னாள் முதல்வர், தளபதி மு.க.ஸ்டா லின், கழக இளைஞர் அணி செயலாளர் தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் நல்வாழ்த்துக்களுடன் நடைபெறும். இந்நிகழ்விற்கு சைதை மேற்கு பகுதியின் அமைப்பாளர் ஜிம் க.பிரபு தலைமையிலும், சைதை மேற்கு பகுதி கழக செயலாளரும், பத்தாவது மண்டலகுழு தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி, சைதை கிழக்கு பகுதி கழக செயலாளரும், பதிமூன்றாவது மண்டலகுழு தலைவருமான இரா.துரைராஜ், பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் எம்.சி., களக்காடி எல்லப்பன், மின்னல் கந்தப்பன், கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை மாநில துணை செயலாளர் எம்.எஸ். ஹரிபாபு ஆகியோர் முன்னிலையிலும்,

வட்டகழக செயலாளர்கள் அட்கோ கமலநாதன், சை.மு.சேகர், தா.மோகன்குமார் எம்.சி., மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஆர்.கிருஷ்ண குமார், கோட்டூர் எஸ்.பிரகாஷ், மற்றும் முகப்பேர் நீலகண்டன் வெ.கிஷோர் குமார், எஸ்.மோகன் குமார், கொடி கே.பாலா, ஆகியோர் வரவேற்பில் நேற்று (01.07.2026 புதன் கிழமை) மாலை 6 மணியளவில் சைதாப்பேட்டை, ரங்கபாஷ்யம் தெருவில் உள்ள மோகனாம்பாள் திருமண மண்டபத்தில் வரவேற்பு நிகழ்வு நடை பெற்றது. இன்று (02.07.2026 வியாழக்கிமை) காலை 7.30 மணியிலிருந்து 9.00 மணிக்குள் திருமண விழாவும் நடைபெறுகிறது.

சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், முன்னாள் அமைச்சருமான மா.சுப்பிர மணியன், திருமணத்தை நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்துகிறார்.

மேலும் இந்நிகழ்விற்கு பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் ப.தாயகம்கவி, ச.அரவிந்த ரமேஷ், காரம்பாக்கம் க.கணபதி, ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா, கழக இளைஞர் அணி துணை செயலாளர் தூத்துக்குடி எஸ். ஜோயல்,

பகுதி கழக நிர்வாகிகள் டி.என்.சிவமணி, த.சம்பத், ஆர்.ரமேஷ், கவிதா கௌதமன், வி.பி.ஜானகிராமன், இ.முருகேசன், ஆர்.ராஜ்குமார், மு. ஆரோக்கியம், மு. பாக்கியலட்சுமி, ஆர்.அருணகிரி, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் சைதை சாதிக், நா.மணிகண்டன், அஞ்சல்ராமன், கோ. பாஸ்கரன், வட்ட கழக நிர்வாகிகள் ந.தமிழரசு, எஸ்.பி.கோதண்டம், எம்.நாகா, நா.ராதாகிருஷ்ணன், எல்.ஆரோக்கியராஜ், க.மணி, கோட்டூர் கோ.சண்முகம், நேரு நகர் எஸ்.பாட்சா, ஆ.வரதன், வே. முருகன்,

மாவட்ட பிரநிதிகள் கு.புகழ்வேந்தன், ஜி.கே. ராமச்சந்திரன், வீ.மதிவாணன், பொன்.ஜெய்சிங், ஆர்.ரவி, பால்கார்ரவி, ஜிபாபு, ஆர்.எல்.காந்தன், த.மணி, மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் எம்.எஸ்.மணி, ஏ.எஸ்.பழனி, ஏ.சந்தோஷ், பி.நரேஷ்குமார், தீனதயாளன், புருஷோத்தம்மன், சம்மந்தம், ஆர்ட்ஸ் குமார், கார்த்திகேயன், ராஜ்குமார், திடீர்நகர் தாஸ், கே. பிரபு, பிரஸ்கார்த்திக், தமீம்அன்சாரி, மாவுமில் ஸ்ரீதர், எம்.மாறன், ச.தினகரன், கேபிள்காளி, எம். ஜி.மதிவாணன், ரவீந்திர குமார், துரைராஜ், சிற்றரசு, தமிழ்வேல் கவி,

அணிகளின் பகுதி அமைப்பாளர்கள் விவேக்செல்வம், விக்னேஷ், ஆர்.எஸ்.ரமேஷ், கற்பகம், எல்.கார்த்திக், கோயில்மணி, ஜி.ஜே. மோசஸ், பி.டி.சி.குமார், ஆர்.தனசேகரன், எஸ். மல்லிகா, சார்புசரவணன், வைரவமூர்த்தி, பூ.பாஸ்கர், ஜெயராமன், நிர்மல்குமார், 139, 139 (அ) வட்டகழக நிர்வாகிகள் மு.கதிரவன், பொ. பரத் குமார், பி.எஸ்.முருகன், எஸ்.சாந்திசுந்தரம், அ.அயாத்பாஷா, அ.சுப்பிர மணி, து.துளசி, எல். சந்திரன், சி.டி.காசிநாதன், வி.சபரி, இ.வரதன், மா.ஏழுமலை, பி.எஸ். பிரகாஷ், சுமதி தீனதயாளன், பூபதி வெங்கடேசன், ஜி.ஏழுமலை, கொடி சுரேஷ், டி.கோபால கிருஷ்ணன், எஸ்.முகமது அலி, என்.ராஜேஷ்,

பகுதி இளைஞர் அணி நிர்வாகிகள் ம.சுகுமார், இரா.சத்யா, மு.அருண், க.தீபன், இரா.வெங்கடேசன், எஸ்.பரத்குமார் உள்ளிட்ட அணிகளின் பகுதி துணை அமைப்பாளர்கள், வட்ட இளைஞர் அணி நிர்வாகிகள், பெருந்திரளாக பங்கேற்று சிறப்பிக்க உள்ளனர்.

---

## தளபதி முருகேசன் – செந்தலை ந.கவுதமன் பங்கேற்பு!

# சூலூர் பாவேந்தர் பேரவை சார்பில் ஐம்பெரும் விழா!

## கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. சிறப்புரை!

கோவை, ஜூலை 2 -

கோவை மாவட்டம், சூலூர் பாவேந்தர் பேரவை சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் 103 ஆம் பிறந்தநாள், பெரியாரியல் அறிஞர், தோழர் வே. ஆனைமுத்து 102 ஆம் பிறந்தநாள், அண்ணல் அம்பேத்கர் 136 ஆம் பிறந்தநாள், பாவேந்தர் பாரதிதாசன் 136 ஆம் பிறந்த நாள், "பேச வைத்த பெரியார்" நூல் மறு பதிப்பு வெளியீட்டு விழா ஆகிய ஐம்பெரும் விழா இன்று (2.7.2026 - வியாழக்கிழமை) மாலை 5 மணி அளவில் எஸ்.ஆர்.எஸ். திருமண மண்டபம் கலங்கல் பாதை, சூலூரில் நடைபெறுகிறது.

விழாவிற்கு சூலூர் பாவேந்தர் பேரவை செயலாளர் நா.வரதராசு வரவேற்புரை ஆற்றுகிறார். சூலூர் பாவேந்தர் பேரவைத் தலைவர் வெ.க. சண்முகவேல் தலைமை வகிக்கிறார்.

சூலூர் பாவேந்தர் பேரவை துணைத் தலைவர் க.தேவராசு, கோவை மைத் கிரியேட்டர்ஸ் யோகராசன், திருமதி மைதிலி யோகராசு ஆகியோர் சிறப்பிக்கப் படுகின்றனர்.

கோவை தெற்கு மாவட்டக் கழக செயலாளர் தளபதி முருகேசன், சூலூர் தெற்கு ஒன்றியக் கழக செயலாளர் த.மன்னவன், சூலூர் சிறப்பு நிலை பேரூராட்சி தலைவர் தேவி மன்னவன், கோவை சூ.செ.குமரவேல் ஆகியோர் சிறப்பிக்கின்றனர்.

தி.மு. கழக கல்வியாளர் அணி மாநிலத் தலைவர், நூலாசிரியர் புலவர் செந்தலை ந.கௌதமன் விழா நோக்கவுரையாற்றுகிறார்.

இவ்விழாவில் கழகத் துணைப் பொதுச் செயலாளரும் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினருமான ஆ.இராசா கலந்து கொண்டு "சாதனைத் தலைவர்கள் நினைவு போற்றல்" நூலினை வெளியிட்டு "சூடு மாறாது சூரியனுக்கு" எனும் பொருளில் சிறப்புப் பேருரையாற்றுகிறார்.

இருகூர் ஆ.சந்திரன், சிற்பி செல்வராசு, அ.வெ.அன்பரசு, கொள்ளுப்பாளையம் ராமசாமி, சோலை ப.கணேசு, உரம் சு.கவுதமன், பசுமை நிழல் சூ.ஆ.விசயகுமார் ஆகியோர் நூலின் முதல் படியை பெற்றுக் கொள்கின்றனர்.

நிறைவாக சூலூர் பாவேந்தர் பேரவைப் பொருளாளர் ச.அங்கமுத்து நன்றி கூறுகிறார்.



பொது இடத்தில் போதைப்பொருள் பயன்படுத்தி வீடியோ வெளியிட்ட த.வெ.க. அமைச்சர் சரத்குமாரை பதவி நீக்கம் செய்ய வலியுறுத்தி தலைமை கழக அறிவிப்பின்படி கோவை வடக்கு மாவட்ட மாணவர் அணி, இளைஞர் அணி, மகளிர் அணி மகளிர் தொண்டரணி சார்பில் கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி தலைமையில் துடியலூர், என்.ஜி.ஓ.காலனி, நால் ரோட்டில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்டக் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி மக்கள் பிரதிநிதிகள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் உள்பட 300 க்கும் மேற்பட்ட கழக நிர்வாகிகள் கைது செய்யப்பட்டனர்.



திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதி, துங்காவி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் போலியோ சொட்டு மருந்து சிறப்பு முகாமை மடத்துக்குளம் சட்டமன்ற உறுப்பினர் இரா.ஜெயராமகிருஷ்ணன் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து கொடுத்து தொடங்கி வைத்தார். இதில் மருத்துவர் மற்றும் செவிலியர்கள் உடன் இருந்தனர்.